(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 53.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, நவெம்பர் 27, சனிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0038/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) காணிச்சீர்திருத்த ஆணைக் குழுவிற்குச் சொந்தமான காணிகளின் உரித்துரிமை யானது ஒப்பந்தங்கள் எதுவும் செய்யப்படாமலே சட்டபூர்வமற்ற முறையில் பல்வேறு ஆட்களுக்கு மாற்றிக்கொடுக்கப்பட்டிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) எந்த அடிப்படையில் மேற்கூறப்பட்ட காணிகள் மாற்றிக் கொடுக்கப்பட்டன என்பதையும், பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் வழங்கப்பட்ட காணிகளின் அளவையும்,

(ii) இவ்வாறு சட்ட நடவடிக்கை முறையைப் பின்பற்றாது, அக்காணிகளை மாற்றிக்கொடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0464/ '10

2.

கௌரவ நூர்டீன் மசூர்,— மீள் குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2004 தொடக்கம் 2010 வரை மீள் குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளிலிருந்து நேரடியாக அல்லது அந்த அமைச்சின் முன்மொழிவுத் திட்டத்திற்கமைய வேறு அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீடுகள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் புத்தளம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்களின் பெண்களுக்கு சுயதொழில்களில் ஈடுபடுவதற்கு வழங்கப்பட்ட தையல் இயந்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அந்த தையல் இயந்திரங்கள் கிடைக்கப்பெற்றவர்களின் பெயர்கள், முகவரிகள், அவை வழங்கப்பட்ட திகதிகள், செலவுறுதிச் சீட்டு இலக்கங்கள் எவை என்பதையும்,

(iii) அந்த ஒவ்வொரு தையல் இயந்திரத்தின் பெறுமதி மற்றும் ஒவ்வொரு தையல் இயந்திரத்தை கொள்வனவு செய்ய செலவிட்ட தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அந்த கருத்திட்டத்திற்காக ஒதுக்கிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) அதிலிருந்து செலவிட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) செலவுகள் மேற்கொள்ளப்பட்ட செலவுத் தலைப்பு யாதென்பதையும்

ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்புடையதாக பிரதேச செயலகப் பிரிவு அடிப்படையில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0467/ '10

3.

கௌரவ அஜித் பி. பெரேரா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை துறைமுக அதிகாரசபையில் கடமையாற்றிய பத்திரகே நிஹால் பெரேரா மற்றும் எஸ்.பி. விமலவீர ஆகியோரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்த எச்.ஆர்.சீ/5432/03 மற்றும் எச்.ஆர்.சீ/5798/03 ஆம் இலக்கங்களைக் கொண்ட முறைப்பாடுகள் தொடர்பில் "உதவிப் பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவியில் ஏனையோரை நியமித்த திகதி தொடக்கம் நியமித்து, சம்பள படிமுறைகளை இற்றைப்படுத்த வேண்டுமென" அந்த ஆணைக்குழு 2005.12.12 ஆம் திகதி விதப்புரை செய்துள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 13/2005 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைய, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விதப்புரைகளை அமுல்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை கடமைப்பட்டுள்ளதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ii) மேற்கூறப்பட்டுள்ள விதப்புரைகளை அமுல்படுத்தாமை தொடர்பில் பாராளுமன்றத்தின் பொது மனுக் குழுவிற்குச் சமர்ப்பித்த மனு தொடர்பில் 2009.10.22 ஆம் திகதி எய்தப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய இவர்கள் இருவரினதும் நியமனங்கள் இதுவரை ஏன் வழங்கப்படவில்லை என்பதையும்,

(iii) பொது மனுக்குழுவானது, துறைமுக அதிகார சபையின் தலைவருக்கு அனுப்பிய 2009.11.24 மற்றும் 2010.02.09 ஆம் திகதியிடப்பட்ட கடிதங்களில் குறிப்பிடப் பட்டுள்ள கட்டளைகளை அமுல்படுத்தாமைக்கான காரணங்கள் எவையென்பதையும்,

(iv) மேற்படி குழுக்கூட்டத்தில் ஏற்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய உரிய நியமனங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(v) ஆமெனின், எத்திகதியில் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0501/ '10

4.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தினுள் அமுலாக்கப்படும் பாடசாலை போசணை நிகழ்ச்சித் திட்டங்கள் எவை என்பதையும்,

(ii) அவற்றிற்காக அரசாங்கம் செலவிடும் பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) இம்மாவட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தில் போசணைக் கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள சதவீதம் எவ்வளவென்பதையும்,

(iv) பாடசாலை போசணைக் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணம் போதுமானதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0545/ ‘10

5.

கௌரவ சாந்த பண்டார,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) 1948 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையிலான காலப்பகுதியினுள் இலங்கை விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்ட அந்த விளையாட்டு வீரர்களின் பெயர் பட்டியல் மற்றும் அந்த வீரர்கள் பெற்றுக்கொண்ட வெற்றிகள், அதனுடன் தொடர்பான வருடங்கள் என்பவற்றை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) எதிர்வரும் ஒலிம்பிக் போட்டி நடைபெறும் இடம் மற்றும் வருடம் யாதென்பதையும்,

(ii) அந்தப் போட்டிகளில் இலங்கையின் விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்கிறார்களா என்பதையும்,

(iii) அதன் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டம் என்ன என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0553/ ’10

6.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த கோட்டைக் கல்லாறு பாலத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அதன் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iii) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இன்றளவில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கான நிதியை முதலீடு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) இதற்கு வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின், உதவி வழங்கிய நாடு மற்றும் வழங்கிய தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) அந்த நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டனவென்பதையும்,

(iii) நிர்மாணப் பணிகளை ஒப்படைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவாவென்பதையும்,

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0563/ '10

7\.

கௌரவ. ஆர். யோகராஜன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் பொறுப்பேற்கப்படுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த தோட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கையையும்,

(ii) இற்றைவரை பொறுப்பேற்கப்பட்டுள்ள தோட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கையையும்,

(iii) பொறுப்பேற்கப்பட்டுள்ள ஒவ்வொரு வைத்தியசாலையிலும் மேற்கொள்ளப் பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான முன்னேற்றங்களையும்,

(iv) மேற்படி வைத்தியசாலைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பணியாட் தொகுதியையும்,

(v) மேற்படி வைத்தியசாலைகளிலுள்ள தற்போதைய பணியாட்களை புதிய ஆளணியில் உள்ளீர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0626/ '10

8\.

கௌரவ புத்திக பத்திரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 நவம்பர் மாதம் 13 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கிக்கு, வங்கி உதவியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக நடாத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றிய மொத்தப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இப்பரீட்சையில் சித்திபெற்றோர் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) இதன் பெறுபேறுகளின்படி தற்போது மத்திய வங்கிக்கு வங்கி உதவியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனரா என்பதையும்,

(iv) அவ்வாறாயின், அதன் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) குறிப்பிட்ட பரீட்சையின் பெறுபேறுகள் இதுவரை பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட முறையில் வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) அவ்வாறாயின், அதற்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0044/ '10

9\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கடந்த ஐந்து வருடங்களாக,

(i) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, சீனி, கோதுமை மா, பருப்பு, பால்மா, வெங்காயம் மற்றும் மிளகாய் போன்ற வர்த்தகப் பண்டங்களின் மொத்த அளவு யாதென்பதையும்,

(ii) மேற்படி பண்டங்கள் மீது விதிக்கப்பட்ட தீர்வை, பெறுமதிசேர் வரி, உற்பத்தி வரி யாதென்பதையும்,

(iii) மேற்படி (ii) இற்கமைய, தீர்வைகள், மற்றும் வரி மூலமாக ஈட்டப்பட்ட மொத்த வருமானம் யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0502/ '10

10.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் காணப்படும் உவர் நீர் மீன்பிடித்துறைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி மீன்பிடித் துறைகளைச் சார்ந்ததாக அமைக்கப்பட்டுள்ள மீனவர் சங்கங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(அ) (i) மேற்படி மீன்பிடித் துறைகளைச் சார்ந்துள்ள மீனவச் சமூகத்திற்காக அரசின் இடையீட்டுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள் யாவையென்பதையும்,

(ii) அவற்றுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) அப்பணத் தொகையானது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்குப் போதுமானதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0554/ '10

11.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த பெரிய கல்லாறு பாலத்தின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அதன் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iii) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இன்றளவில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கான நிதியை முதலீடு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) இதற்கு வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின், உதவி வழங்கிய நாடு மற்றும் வழங்கிய தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) அந்த நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டனவென்பதையும்,

(iii) நிர்மாணப் பணிகளை ஒப்படைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவாவென்பதையும்,

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0564/ ‘10

12.

கௌரவ. ஆர். யோகராஜன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புசல்லாவை, ப்ரோடப் தோட்ட வைத்தியசாலை 2009 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டது என்பதையும் ,

(ii) சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும்,

(iii) அக்கட்டடம் மக்கள் பாவனைக்காக ஒப்படைக்கப்படாமல் மூடப்பட்ட நிலையிலுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அக்கட்டடத்தை மக்கள் பாவனைக்காக திறந்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எப்போது திறந்து வைக்கப்படுமென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0095/ ’10

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010.05.01ஆம் திகதியிலிருந்து 2010.07.01 ஆம் திகதி வரை அமைச்சரவை அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஆகியோருக்குச் செலுத்தப்பட்ட தொகைகள், மற்றும்,

(ii) அமைச்சர்களும் அவர்களது ஆளணியினரும் அனுபவித்துவரும் பிற சலுகைகள்

என்பவற்றை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0503/ ’10

14.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் காணப்படும் நன்னீர் மீன்பிடித்துறைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி மீன்பிடித் துறைகளைச் சார்ந்ததாக அமைக்கப்பட்டுள்ள மீனவர் சங்கங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(அ) (i) மேற்படி மீன்பிடித் துறைகளைச் சார்ந்துள்ள மீனவச் சமூகத்திற்காக அரசின் இடையீட்டுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள் யாவையென்பதையும்,

(ii) அவற்றுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) அப்பணத் தொகையானது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்குப் போதுமானதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0617/ ‘10

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிசுக்கல் மேற்பார்வைத் தலைவி பதவிக்கான தற்போதைய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு நடைபெறுமா என்பதையும்,

(iii) இன்றேல், தற்போது மேற்படி ஆட்சேர்ப்பு முடிவடைந்துள்ளதா என்பதையும்,

(iv) மேற்படி பதவிக்கான ஆகக் குறைந்த தகைமைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— 2010 நவெம்பர் மாதம் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, திசெம்பர் மாதம் 01 ஆம் திகதி புதன்கிழமை, 02 ஆம் திகதி வியாழக்கிழமை, 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 04 ஆம் திகதி சனிக்கிழமை, 06 ஆம் திகதி திங்கட்கிழமை, 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 08 ஆம் திகதி புதன்கிழமை, 09 ஆம் திகதி வியாழக்கிழமை, 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய நாட்கள் “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 1) , — 70(2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2010 நவெம்பர் மாதம் 30 ஆம் திகதி முதல் திசெம்பர் மாதம் 09 ஆம் திகதி வரை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 7.00 மணிக்கு 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 2) , — 70(2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் “ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011)” இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2010 திசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப.6.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) — (ஒதுக்கப்பட்ட ஐந்தாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2010, நவெம்பர் 22) [1].

* 2.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ், காணி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 2005 நவம்பர் மாதம் 23ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட “நில அளவைச் சபை—2005 (வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப்பத்திரங்கள்)” பிரமாணங்களின் 3 ஆம் பந்தியை திருத்துவதற்காக 2009, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1633 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நில அளவைச் சட்டத்தின் 39ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65ஆம் பிரிவின் கீழ், காணி, காணி அபிவிருத்தி, குடியிருப்பு மற்றும் போர் வீரர் நலனோம்புகை அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2005, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "2005 நில அளவைச் சபை (பதிவு) பிரமாணத்தின்" 2(2) ஆம் பந்தியை திருத்துவதற்காக 2010, ஏப்பிரல் மாதம் 12 ஆம் திகதிய 1649/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2010.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

தொழில் உறவுகள், விளைவுப்பெருக்க மேம்பாட்டு அமைச்சர்,— பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் கீழான ஒழங்குவிதிகள்,— 1956 ஆம் அண்டின் 47 ஆம் இலக்க, பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 20அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 31 ஆம் பிரிவின் கீழ், அச்சட்டத்தின் 20அ ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்க, தொழில் உறவுகள், விளைவுப்பெருக்க மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2010, ஓகத்து மாதம் 20 ஆம் திகதி 1667/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2010.11.09ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம்

அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 8.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 9.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 10.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 11.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 12.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 13.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்) சட்ட மூலம் - இரண்டாம் மதிப்பீடு.

* 18.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தம்) சட்டமூலம் - இரண்டாம் மதிப்பீடு.

19.

தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

செந்தாமரை (சர்வதேச) இலங்கை அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.